# மாறிவரும் சமூக அமைப்பில் அளிக்கம்பை வனக்குறவர் சமூகத்தின் இன்றைய நிலை

சந்திராதேவி தயாகாந்தன்,
கல்வித்திணைக்களம், மட்டக்களப்பு.

## ஆய்வுச் சுருக்கம்

அளிக்கம்பை பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாடோடிக் குழுக்கள் இலங்கைவாழ் வனக்குறவர்களின் ஒரு தொகுதியினராவர். இவர்கள் தமது பாரம் பரியத் தொழில்களான பிச்சையெடுத்தல், பாம்பாட்டுதல், குறிசொல்லுதல் போன்றவற்றுடன் வேட்டையாடுதல், சேனைப்பயிர்ச்செய்கை போன்றவற்றிலும் ஈடுபட்டு அவர்கள் தம் வாழ்வாதாரத்தைத் தேடிக்கொண்டனர். இவர்கள் 1950 களைத் தொடர்ந்து பொலநறுவை திருகோணமலை, மட்டக்களப்புப் பிரதேசங்களைச் சார்ந்த காட்டுப் பிரதேசங்களில் இடம்விட்டு இடம்நகர்ந்து தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்து குறிப்பாக புளியடிப்பிட்டி, முள்ளிக்குளம், அம்பலத்தாறு ஓடியவெளி, வெல்வெந்தா, பனையறுப்பன்கேணி ஹங்குரான் காடுகளில் காலத்துக்குக் காலம் மாறி, மாறி வாழ்ந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து பெரியவிகாரை, சின்னவிகாரை, சங்கமித்தகுளம், கைக்கேணி, கந்தம்வெளி முதிர்ச்சோலை, போன்ற இடங்களிலும் தற்காலிகக் குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்து வந்தனர[1] இலங்கையில் வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம், கலாவெவ தம்புத்தேகம, விஜிதபுர, பொலநறுவை போன்ற பிரதேசங்களில் காடுகளைச் சார்ந்த பிரதேசங்களில் குழுமிய குடியிருப்புக்களாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நாடோடிகளாகவும் வாழ்கின்றனர். அளிக்கம்பை வனக்குறவர் சமூகத்தினர் தமக்கான அன்றாட உணவினையும், பிற குழுக்களிடமிருந்து தங்களுக்கான பாதுகாப்பையும் மட்டுமே கருதியிருந்தனர் தமது பாரம்பரியத் தொழில்களான பாம்பாட்டுதல் வேட்டையாடுதல், பிச்சையெடுத்தல் போன்றவற்றையே நம்பியிருந்தனர். தாமும் ஏனைய சமூகத்தைப்போல் பொருளாதாரத்தைப் பெருக்க வேண்டும், கல்வியில் முன்னேற வேண்டும் என்றோ மற்றவர்களிடம் கையேந்தாமல் சுயகௌரவத்துடன் வாழ வேண்டும் என்ற எண்ணமோ அற்றவர்களாகவே வாழ்ந்து வந்தனர் இன்றைய நிலையில் அளிக்கம்பை வனக்குறவர் சமூகம் தமது வளர்ச்சிக்குத் தடையாகவிருந்த காரணிகளை ஓரளவு உணரத் தலைப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்வியல் அம்சங்களான கல்வி, சுகாதாரம், மருத்துவம், குடியிருப்பு, சடங்குகள் போன்ற விடயங்களில் குறிப்பிடக்கூடியளவு மாற்றத்தையும், வளர்ச்சியையும் கொண்டு வர அவர்கள் முயற்சிக்கின்றனர். தமது சமூக வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும் காரணிகளை இனங்கண்டு அவற்றை ஏற்றுக் கொணடு தமக்குரிய சமூக அந்தஸ்து வரின் அதனை மனப்பூர்வமாக ஏற்று மாற்றங்களை உள்வாங்கப் பழகுகின்றனர். இருப்பினும் மாற்றத்தை விரும்பாத மக்களும் தமது ஆதங்கங்களை வெளியிடுவதை எனது களப்பணி மூலம் கண்டு கொண்டேன். இம்மாற்றங்களை மதமாற்றம், பாடசாலைகள், சமூகநிறுவனங்கள், பிற சமூகங்களுடனான தொடர்புகள் என்பன தீர்மானிக்கின்றன. இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம் அளிக்கம்பை வனக்குறவர் சமூக வளர்ச்சிக்கும், அவர்கள் ஒதுங்கி வாழும் நிலையையும், ஒதுக்கப்படும் நிலையையும் மாற்றியமைப்பதற்குமான தீர்வுகளையும், விதந்துரைகளையும் கூறுவதாகும்.